சென்னை அரசாங்க வரவு செலவுத் திட்டம்

"வாய்க்கும் கைக்கும் சரியாக நிற்கிறது"

பொக்கிஷ அங்கத்தினர் பேச்சு

மொத்தக் குறிப்பு:—

		1923-24 திருத்திய திட்டம் லட்ச ரூபா	1924-25. திட்டம் லட்ச ரூபா
1.	வரவு செலவுக் கணக்கு:—		
	(a) வருமானம்	1659	1675
	(b) செலவு	1640	1660
	(c) மிகுதித் தொகை	+19	+15
2.	கடன் தொகை முதலியன:—		
	(d) வாங்கப்பட்ட தொகை	65	112
	(e) பட்டுவாடா செய்தது	81	125
	அதிக செலவு	—16	—13
3.	மொத்தத்தில் மிகுதித் தொகை	+3	+2
4.	வருஷ ஆரம்பத்தில் இருப்பு	9	12
5.	வருஷ முடிவில் இருப்பு	12	14

வரவு செலவு திட்டத்தைச் சபைமுன் கொண்டு வரும்போது பொக்கிஷ அங்கத்தினராகிய ஸர் சார்லஸ் டாட்ஹண்டர் பேசியதன் சாரம் பின் வருமாறு :—

அக்கிராஸனரே! சீர்திருத்த சபை ஸ்தாபிக்கப்பட்ட பின் பொக்கிஷ நிலை பல மாறுதல்களுடன் கூடியதாக இருக்கிறது. நல்ல காலம் நான் இப்போது எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கும் திட்டத்தை முன் வைக்கும் பெருமை பெற்றுள்ளேன். ஏதோ மற்றொரு மாகாணத்தைப்போல் ஏராளமான அதிக வருமானத்தைக் காட்டுவதாகக் கூறவில்லை. இந்த திட்டத்தால் வருமானமும் அதிகமில்லை. செலவும் வருமானத்தை மீறி விடவில்லை. வாய்க்கும் கைக்கும் சரியாக இருக்கிறதென்று சொல்வேன்.

இப்போது நடக்கும் வருஷத்தில் சிக்கனக் கமிட்டியார் அவ்வப்போது செய்த சிபார்சுகளாலும் அரசாங்கத்தார் அவ்வப்போது செய்து வந்த சிக்கனங்களாலும் 19.5 லட்சம் அதிக செலவாக வேண்டியதற்குப் பதில் 11 லட்சம் மிகுதி தொகை காட்டும்படியாக இருக்கிறது. செலவினங்களில் சிக்கனம் செய்துவந்தபோதிலும் ஜில்லா போர்டு நகர பரிபாலன சபை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகமாகவே ஒன்றரை கோடி ரூபா கொடுத்துதவியிருக்கிறோம். பெரிய ரஸ்தாக்களுக்கு முதல் கொடுத்தும் வைத்தியம் சுகாதாரம் முதலிய இலாக்காக்களுக்காக நிதிகொடுத்தும் உதவி செய்திருக்கிறோம். கணக்குகள் வைத்து ஒழுங்குபடுத்திக் கொள்ள அவர்களுக்குவேண்டிய வசதியும் செய்து கொடுத்திருக்கிறோம்.

1923-24-ஷ திருத்திய திட்டம்

இப்போது நடக்கும் வருஷத்தில் எதிர்பார்த்த அதிக செலவு 19.5 லட்சரூபா. இதனுடன் எதிர்பார்த்த கிஸ்தி வருமானக்குறைவு நேர்ந்துவிடும்போலிருந்தது. காலமழையின்றியும் வெள்ளத்தாலும் பல ஜில்லாக்கள் சேதமடைந்தன. இதன் பயனாக வருமானத்தில் 28 லட்சம் குறைவு ஏற்பட்டது. ஆனால் நிர்வாகம் செய்துவரும் அரசாங்க இலாகாக்களில் செலவு குறைக்கப்பட்டுவந்திருக்கிறது. பொதுவாக நிர்வாக இலாகாவிலும் ரெவினியூ இலாகாவிலும் 13 லட்ச ரூபாயும் மராமத்து இலாகாவில் 8 லட்சமும் சிறைச்சாலைகளில் 6 லட்சமும் போலீஸ் இலாகாவில் 10·5 லட்சமும் நீதி யிலாகாவில் 3·5 லட்சமும் காட்டிலாகாவில் 3 லட்சமும் கலால், விவசாயம், கைத்தொழில், கல்வி இலாக்காக்களில் ஒவ்வொன்றிலும் 2·5 லட்சமும் மற்ற இலாகாக்களில் 4 லட்சமும் செலவுகள் குறைந்தன. ஆக மொத்தம் 58 லட்சம் செலவில் சிக்கனம் செய்யப்பட்டதன் பயனாக 28 லட்சம் நஷ்டம் வந்ததைத் தாங்கி நின்று மிகுதி தொகையும் காட்டியிருக்கிறோம்.

அடுத்த வருஷத்து திட்டம்

1924-25-ம்வருஷத்திற்கு அதிகவருமானம் காட்டப்பட்டிருக்கிறது. ரெவின்யூ போர்டார் மிக ஜாக்கிரதையாக கவனித்துப்போட்ட திட்டத்தின் மேல் நிலவரியில் அதிக வருமானமும் ஸ்டாம்பு விற்பனைகளில் சென்ற வருஷத்தை விடச் சிறிது அதிக வருமானமும் எதிர் பார்க்கிறோம்.. வரியை உயர்த்தியவுடன் ஜனங்கள் ஸ்டாம்புகள் வாங்குவது குறைந்து பிறகு முன்போல் வாங்க ஆரம்பம் செய்வார்கள். இதுவே புதிதாக வரி உயரும் போது நேரக்கூடியது. கலால் திட்டத்தில் 6.5 லட்சம் குறையு மென்று எதிர் பார்த்து திட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் இப்போது கிடைத்திருக்கும் ஏலக்கணக்கைப் பார்த்தால் இதில் இன்னமும் குறைவு ஏற்படுமென்று தோன்றுகிறது.

செலவினங்களில் மொத்த திட்டமாக நிற்பது சென்ற வருஷத்தைக் காட்டிலும் 65 லட்சம் குறைவு. இதற்குக் காரணம் செலவினங்களில் பொதுவாக சிக்கனம் செய்ததேயாம். இந்த திட்டம் இன்னமும் குறைந்திருக்கக்கூடும். ஆனால் பல காரணங்களால் சம்பள உயர்வு ஏற்பட்டதில் மொத்தம் 11 லட்சம் அதிகம் செலவு ஏற்பட்டிருக்கிறது. இவ்விதம் நிரந்தரமான செலவினங்களும் கடன் கொடுக்க வேண்டியதற்காகத் தேவையாயிருக்கும் தொகையும் போக மிகுதியாக நிற்பது 27 லட்ச ரூபாய். அது புது திட்டங்களுக்கு உதவும். இதற்குமேல் 43 லட்சம் கடன் வாங்கிப் புதிய திட்டங்கள் நடத்துவதென்று தீர்மானிக்க உத்தேசம். நடை முதலிலிருக்கும் வேலைகளுக்கு 23 லட்சமும் புதிய திட்டங்கள் தொடங்க 20 லட்சமும் சேர்ந்து 43 லட்சம். இதனுடன் முன் சொல்லிய மிகுதி தொகை 27 லட்சமும் சேர்ந்து 70 லட்சமாகிறது. இதிலிருந்து 7 லட்சம் எதிர்பாராத செலவுக்கென்று எடுத்துவைத்துவிட வேண்டும். வெள்ளச் சேதங்களால் இன்னும் நஷ்டம் கொடுக்க நேரக்கூடும். சர்வகலாசாலை விஷயமாக திட்டம் இனி வரக்கூடும். இதற்கெல்லாம் உபநிதிகள் தேவையாக இருக்கும். இவ்வித செலவிற்காக 7லட்சரூபாய்போகபாக்கியுள்ள தொகை 63 லட்சரூபாய்கள். இப்போது வேலை நடக்கும் திட்டங்களுக்காக 23 லட்சம் கொடுக்கப்படவேண்டும். 298 வேலை திட்டங்களுக்கு மொத்த செலவு 134 லட்சம் ரூபாய்கள். இவ்வளவும் இப்போது வேலையாகிவருகின்றன இவற்றிற்குப் பணம்கொடுத்து வருவது மிகக்கடினமான வேலை. ஒவ்வொன்றும் பணத்தை விரும்பி நிற்கும்போது எவற்றிற்கு முன்பு கொடுப்பது என்று சொல்வது கஷ்டமாகவிருக்கும். இவற்றுள் ஒதுக்கப்பட்ட இலாகாக்களுள் 28 லட்சம் செலவாகியிருக்கிறது. இவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :—

நீர்ப்பாசன இலாகாவில் 13 லட்சம். கிருஷ்ணா அணைக்கட்டில் மூடுபலகைகளுக்குச் செலவான 4 லட்ச ரூபாயும் இதில் சேர்ந்தது. மேட்டூர், சங்கமேஸ்வரம் திட்டங்களும் இந்தப் பணத்தைக் கொண்டு வேலை தொடங்கலாம் என்று நீர்ப்பாசன அங்கத்தினர் நம்புகிறார்.

பொது நிர்வாக இலாகாவில் 3.39 லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது இதில் சென்னை நகரத்திலிருக்கும் உத்தியோகஸ்தருக்கும்குமாஸ்தாக்களுக்கும் வீட்டுவசதிக்காகச் செலவு ரூபா 1.84 லட்சம்.

காட்டிலாகாவுக்காக ஒலவக்காடு வாள் தொழிற் சாலைக்காக செலவிடப்போவதுள்பட ரூபா 2.84 லட்சம்.

போலீஸ் இலாகாவில் 2.65 லட்சம் செலவில் 2.31 லட்சம் கட்டடங்களுக்காகப் பிரத்தியேகப்படுத்தப் பட்டிருக்கிறது. 11 லட்சம் மதுரை தஞ்சை ஜில்லாக்களில் கள்ளர்கள் முன்னேற்றத்திற்காகச் செலவிடப்படும் கிருஷ்ணாஜில்லா பிரிவினால் ஏற்படும் போலீஸ் செலவு.11 லட்சம். கிருஷ்ணா ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டின் சிப்பந்திப் படகுகளுக்குச் செலவு 1.09 லட்சம்.

தொழிலிலாகாவில் 2.31 லட்சம் செலவு திட்டமேற்பட்டிருக்கிறது. சிறைச்சாலை இலாகாவில் 1.80 லட்சம் செலவு செய்யப்படும். ஏஜன்ஸி பிரதேசங்களில் ரஸ்தாக்கள் போடவும் கோலப் நதிக்குப் பாலம் கட்டவும் மற்றும் பல செலவுகளுக்காகவும் 1 32 லட்சம் செலவிடப்படும்.

மாற்றப்பட்ட இலாகாக்கள்

மாற்றப்பட்ட இலாகாக்களில் மொத்தச் செலவு 35 லட்ச ரூபா. இதில் சென்னை நகர பரிபாலன சபைத் தண்ணீர் வசதிக்காக 6.50 லட்ச ரூபாயும் வெளி நகரபரிபாலன சபைகளுக்கு 8.43 லட்ச ரூபாய்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அடுத்தபடியாக வைத்திய இலாகா செலவாக 8·93 லட்சரூபா போடப்பட்டிருக்கிறது. இதில் கட்டடச் செலவு 5·27 லட்சம்.

கல்வி யிலாகாவுக்காக 5·01 லட்சம் செலவு சேர்க்கப்பட்டிருக்கிறது.

ரஸ்தாக்களுக்கும் பாலங்கள் கட்டவும் ஸ்தல ஸ்தாபனங்கள் 3·54 லட்சரூபாய் அடைகின்றன.

கைத்தொழில் இலாகாவில் 1·97 லட்சம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விவசாயம், கால்நடை வைத்தியம், கூட்டுறவு இலாகாக்கள் 4·6 லட்சம் அடைகின்றன. கூட்டுறவு இலாகாவில் ·30 லட்சரூபா செலவு. மற்றவை விவசாய, மிருக வைத்திய விஷயங்களுக்காகச் செலவு.

இந்தச் செலவினங்களைக்கொண்டு அங்கத்தினர் திருப்தியடைவார் என்று நான் நினைக்கவில்லை. பல இலாகாக்களில் செலவு அதிகம் செய்து முன்னேற்றமடைய வேண்டுமென்ற எண்ணமிருக்கும். ஆனால் அதிகசெலவுசெய்து கடன் திட்டமாக வைப்பதைக் காட்டிலும் அடுத்த வருஷத்தில் சிக்கனம் செய்வது நலமென்று நான் சொல்வேன். மாற்றப்பட்ட இலாகாக்களுக்கு அதிக தொகை செலவிடவில்லையென்று சொல்கிறவர்கள் திட்டத்தை ஊன்றிப்பார்த்தால் வருஷாவருஷம் நிலை மாறிக்கொண்டு வருவது தெரியும்.

இனி செய்யவேண்டியதென்ன?

உப்புவரி நிலைமை மிக நெருக்கடியானதாக வந்திருக்கிறது. வரியை ரூபா 1-4-0 ஆக்குவதா அல்லது ரூபா2-0-0 ஆக்குவதா என்று யோசித்து முடிவு செய்யப்பட வேண்டும். இப்பொழுது உப்புவரியைப்பற்றி நான் எதுவும் பேச விரும்பவில்லை. ஜனங்களுக்கு இந்த வரிப்பளுவினால் கஷ்டம் அதிகரிக்க வில்லையென்பதற்கு ஆதாரங்கள் தேட நான் விரும்பவில்லை. அரசியல் நிலையில் உணர்ச்சியென்பது முக்கிய மென்று நான் ஒப்புக்கொள்கிறேன். நான் ஒருகேள்வி கேட்க விரும்புகிறேன். இந்த உணர்ச்சியென்பது உண்மையில் ஏழைகள் வரையில் சென்றிருக்கிறதா? இந்த சந்தர்ப்பத்தில் என் அனுபவமொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏழாம் எட்வர்ட் மன்னர் பட்டத்திற்கு வந்தபோது சுமார் 20 வருஷங்களுக்கு முன் ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டி உப்புவரி குறைக் கப்பட்டது. இந்த சன்மானத்தை ஜனங்களுக்கு நன்றாக விளக்கிக்காட்ட வேண்டுமென்று ஜில்லா அதிகாரிகளுக்கெல்லாம் உத்திரவு கிடைத்தது. அப்போது எனக்கும் ஒரு ஜமாபந்தி நடத்த சமயம் சந்தர்ப்பம் கிடைத்தது. கிராமாதிகாரிகளும் கிராம ஜனங்களும் நிறைந்த சபையில் இந்த விளம்பரம் வாசிக்கப்பட்டபோது ஜனங்களிடம் யாதொரு உணர்ச்சியும் எழவில்லை. அப்போது ஜனங்களைக் கேள்விகள் கேட்டாவது பதில் அறியலாமென்று விரும்பினேன்.

நான்-சென்ற வருஷம் உப்பு விலையென்ன?

அவர்-ஒன்றே காலணா.

இப்போது விலையென்ன?

ஒரு அணா.

குறைந்ததற்குக் காரணமென்ன?

தாங்கள் செய்த தயவு.

எனக்கு மேலே உள்ளவர் கொடுத்த வெகுமதியது ; அவர் யார்?

சர்க்கார்.

சர்க்காருக்கு மேலே உள்ளவர் செய்த உதவி, அவர் எவர்?

பார்லிமெண்டு.

பார்லிமெண்டுக்கு மேலே உள்ளவர் செய்தார், அவர் யார்?

ஜனங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. வயோதிகமான கர்ணம் ஒருவர் எழுந்து தாம் எல்லாம் அறிந்தவராக நடித்து "ரெவினியூ போர்டு" என்று பதில் கொடுத்தார். இதுபோல இராஜதந்திரிகள் எவராவது முயற்சியெடுத்து உப்புவரியை ரூ. 1-4-0க்குக் குறைக்க ஏற்பாடுசெய்து வெற்றி பெற்றால் அதனால் கிராமத்தார் அடையும் பயன் மிகச் சொல்பமே.

இந்த விஷயம் உப்புவரியை 2 ரூபாயாக வைப்பதா அல்லது ரூ. 1-4-0 ஆக்குவதா என்ற கேள்வியே இல்லை. ஒன்றரை கோடி ரூபாயை மூன்று மாகாணங்களும் கொடுப்பதா? அல்லது இந்தியா முழுமையும் சேர்ந்து கொடுப்பதா? என்று மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த மூன்று மாகாணங்களின் நிலைமையை கவனித்தோமானால் இந்தியாவில் மற்ற பாகங்களை விட இவைகளே அதிக வரிபோட்டு ஜனங்கள் மீது அதிக பாரம் ஏற்றியிருக்கின்றன. ஆதலால் இவ்விஷயத்தில் உணர்ச்சியை கவனிப்பது அவ்வளவாக நல்ல தல்ல.

மேலும் இந்த மாகாணத்தில் உப்புவரியினால் குறையப்போகும் மொத்தத் தொகை 80 லட்சம் ஆகாதென்றே நினைக்கிறேன். அவசியமான திட்டங்களுக்கு உதவும்படியாக 80 லட்சம் ரூபா கிடைக்கும். இந்த நோக்கத்துடன் பார்த்தாலும் இந்தியா அரசாங்க பொக்கிஷ அங்கத்தினர் திட்டத்தை ஏற்றுக்கொள்வதில் இந்த மாகாணத்திற்கு லாபமிருக்கிறது.

மேலும் இப்போது இந்த 2 ரூபா தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் இனி எப்போதும் வருஷாவருஷம் 80 லட்சம் ரூபா மாகாணத்திற்கு மிகுதி யென்பதையும் யோசிக்க வேண்டும். எவ்வளவோ முக்கிய செலவுகளுக்கு மாகாணத்தில் பணம் கிடைக்காமல் இருக்கிறது. நான் பல வருஷங்களாக இந்த மாகாணத்தில் உத்தியோகம் செய்து இப்போது நீங்கப் போகிறேன். எனக்கு இனி இந்த ஒரு எண்ணமே சந்தோஷத்தைக் கொடுக்கும். அதாவது இந்தத் தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டால் பல திட்டங்கள் நன்றாக வேலை தொடங்கப்பட்டு சீக்கிரம் முடிவுபெறும் என்பதேயாம்.

காந்தி புராணம்

பண்டிதை
அசலாம்பிகை அம்மாள்
இயற்றியது

விலை ரூபா 1.

பண்டிதை-
அசலாம்பிகை அம்மாள்,
திருப்பாப்புலியூர்.

காந்தி மாதம்

நமது முன்னணி வேலை

மௌலானா முகமதலியின் வேண்டுகோள்

தில்லி, மார்ச்சு 3.

மௌலானா முகமதலி கீழ்க் கண்ட அறிக்கையை விடுத்துள்ளார் :—

சென்ற ஜனவரி மாதக் கடைசியில் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் பிப்ரவரிமீ 18உயிலிருந்து மார்ச்சுமீ 18உ வரையில் காந்தி மாதம் கொண்டாடப்பட வேண்டுமென்று தீர்மானித்தபோது நான் எனது சகோதரர், பண்டித ஜவஹரிலால், தேஷ்பாண்டே முதலியவர்களுடன் அம்மாதம் முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்யத் திட்டம் போட்டுக் கொண்டேன். ஆனால் வெகுநாட்களாக நோய்வாய்ப் பட்டிருக்கும் எனது புதல்வியின் தற்கால நிலைமை மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறபடியால் நாங்கள் போட்டிருந்த திட்டத்தின் பிரகாரம் சுற்றுப் பிரயாணம் செய்ய இயலாமலிருக்கிறதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அலிகாரை விட்டுப் புறப்படும் எண்ணத்தையே சிறிது காலத்திற்கு விட்டு விடவேண்டு மென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். காரியக் கமிட்டிக் கூட்டத்திற்கு நான் பம்பாய்க்குச் சென்றபோது மிகுந்த பிரயாசையின் பேரில் எனது புதல்வியின் அனுமதியைப் பெற்றேன். அப்பொழுது கூட மற்றொரு நோயாளியாகிய மகாத்மாஜியைப் பார்க்கச் செல்கிறேனென்பதை உத்தேசித்தே அவள் என்னைப் போகவிட்டாள். ஏனெனில் அவரிடம் எனக்குள்ள அன்பு எனது புதல்வியிடம் உள்ள அன்பை விடக் குறைந்ததல்ல வென்பது அவளுக்குத் தெரியும். ஆனால் மகாத்மாஜியின் விடுதலையை முன்னிட்டு நான் இன்னும் சில நாட்கள் அதிகமாகவே தங்கும்படி நேர்ந்துவிட்டது. சென்ற 26உ தில்லியில் நடந்த காரியக்கமிட்டிக் கூட்டத்திற்கு நான் சென்றபோது வழியில் அலிகார் ஸ்டேஷனில் என்னுடைய மனைவி என்னைச் சந்தித்து எனது மகளின் வெப்பநிலை தினந்தோறும் மாலையில் 105 டிகிரிக்கு ஏறிவிடுகிறது என்று தெரிவித்தாள். அப்பொழுதும் டாக்டர் அன்சாரி கவலைக்கிடமில்லை யென்று உறுதியளித்தால் சுற்றுப் பிரயாணத்தை நிறுத்தவேண்டிய தில்லையென்று கருதி அவரைத் தில்லியிலிருந்து அழைத்துக்கொண்டு வந்தேன். அவர் வந்து நோயாளியைப் பரிசீலனை செய்ததின் பயனாக எங்களுடைய சந்தேகங்களே உறுதியாயின. ஆகவே மிகுந்த வருத்தத்துடன் எனது சுற்றுப் பிரயாணத்தை நிறுத்திக்கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறேன். ஆனால் என்னை எதிர்பார்த்திருந்தவர்கள் எனதுநிலைமை உணர்ந்துகொள்வார்களென்றும், காந்தி மாதத்தில் இருமடங்கு முயற்சி எடுத்து வேலைசெய்து நிர்மாண திட்டத்தை நிறைவேற்றி வைப்பார்களென்றும் உறுதியாக நம்புகிறேன்.

மாதத்தில் இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன. பற்பல மாகாணங்களும் அகில இந்தியக் கமிட்டிக்கு அனுப்பியுள்ள திட்டங்களை நிறைவேற்றி வைக்க உறுதியுடன் உழைக்கும் பட்சத்தில், மாத முடிவிற்குள் அருங்காரியங்களைச் செய்து முடித்து நமது இணையற்ற தலைவருக்கு அறிவித்து அவர் குணமடைவதைத் துரிதப்படுத்தலா மென்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

பல மாகாணங்கள் சிறந்த வேலை செய்வதாக வாக்களித்திருக்கின்றன. மற்றும் சில மாகாணங்கள் வேலைத் திட்டங்களைப் போட்டுவிட்டு மற்ற மாகாணங்கள் பணங்கொடுத்தால் தான் நடக்கும் என்று சொல்கின்றன. இங்ஙனம் மற்ற மாகாணங்களை எதிர்பார்த்தல் சரியல்லவென்பதை யுணர்ந்து அம்மாகாணங்களும் சுய நம்பிக்கையுடன் வேலையிலிறங்குமென நம்புகிறேன். முதல் இரண்டு வாரங்களில் வேலையைப்பற்றி விரிவான அறிக்கையை அகில இந்தியக் கமிட்டிக்கு அனுப்பிவைக்கும்படியாக எல்லா காங்கிரஸ் கமிட்டிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

எப்பொழுதையும்விட இன்றைய தினம் இந்தியாவின் கதி மோட்சம் இந்தியர்களின் கையிலேயே இருக்கிறதென்றும், நாம் செய்யும் நிர்மாண வேலையினாலேயே நாம் கடைத்தேறக் கூடுமென்றும் உறுதியாக நம்புகிறேன். ஆண்டவன் அருளிலும் நமது முயற்சியிலுமே நம்பிக்கை வைக்கவேண்டும். நான் செய்யலாமென நம்பியிருந்த அளவிற்கு வேலை செய்ய இயலாமலிருப்பதைப்பற்றி எனக்குண்டாகும் மனத்துயரை வெளியிட வல்லவனல்லேன்.

தற்பொழுது அலிகாரிலிருப்பது விலக்கவொண்ணாத கடமையென்று கருதியே இங்கு தாமதிக்கிறேன். தற்பொழுது செய்துவரும் சிகிச்சையின் பலனாக எனது புதல்வி மலைப் பிரதேசத்திற்குக் கொண்டுபோகப் படுவதற்குப் போதிய வலிமையேனும் பெற்றால் என்னை மிகவும் அதிர்ஷ்டசாலியெனக் கருதுவேன். அல்லாவின் கருணையிலும், எனது தேசமக்களின் பிரார்த்தனையிலுமே நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

கல்லிடைக் குறிச்சி ஸ்ரீ திலகர் வித்தியாலயம்

இரண்டாவது வருட திருவிழா

ஷை திருவிழா நிகழும் 1099-ம் ஷ மாசிமீ 26உ [9-3-24] ஞாயிற்றுக்கிழமை யன்று ஷை கல்விச்சாலையில் நடைபெறும். தேசபக்தசிகாமணி, சென்னை ஸ்ரீமான், எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள்.

பம்பாய் தொழிலாளர்

கிராமங்களுக்குச் செல்கின்றனர்

பம்பாய், மார்ச்சு 3.

வேலை நிறுத்த நிலைமையில் மாறுதல் இல்லை. தொழிலாளர் அமைதியாக இருக்கிறார்கள். போனஸ் கொடுக்கப்பட்டாலன்றி வேலைக்குத் திரும்புவதில்லை யென்று அவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள். இதுவரையில் பதினாயிரம் தொழிலாளர் தங்களுடைய கிராமங்களுக்குத் திரும்பிப் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

மற்றொரு வேலை நிறுத்தம்

பம்பாய், மார்ச்சு 4.

பம்பாய் நகருக்கருகில் ஸூரி என்னுமிடத்திலுள்ள ஏஷியாடிக் பெட்ரோலியம் கம்பெனி தொழிலாளர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள். தொழிலாளர்களைத் தகுந்த காரணமின்றி வேலையிலிருந்து நீக்கி வந்ததே வேலை நிறுத்தத்துக்குக் காரணம் என்று தெரியவருகிறது.

பம்பாய் சட்டசபை

கண்டனத் தீர்மானத்தின் கதி

பம்பாய், மார்ச்சு [illegible]

இன்று பம்பாய் சட்டசபையில் [illegible] கோதாரே என்பவர் அரசாங்கத்தின் [illegible] முறையைக் கண்டனம் செய்யும் [illegible] டன் கல்வி கிராண்டிலிருந்து ஒரு [illegible] வைக் குறைக்க வேண்டுமென்று பிரே[illegible] தார்.

ஸ்ரீமான் ஜெயகர் பிரேரணையை [illegible] துப் பேசுகையில் எலிபின்ஸ்டன் [illegible] யின் தலைமை ஆசிரியர் ஸ்தான[illegible] தகுதியுள்ள இந்தியர்கள் இருக்கையில் [illegible] ரேலிய தேசத்தவர் ஒருவரை நிய[illegible] பொதுஜன அபிப்பிராயத்தைப் புறக்[illegible] தாகுமென்று கூறினர். பிரேரே[illegible] சாதகமாக 39 பேரும் பாதகமாக 44 [illegible] வாக்களித்தபடியால் பிரேரணை [illegible] போயிற்று.

அகில இந்திய தொழிலாளர் மகாநா[illegible]

கல்கத்தா, மார்ச்சு 3.

அகில இந்தியத் தொழிலாளர் மகாநாட்டின் அமைப்பைப்பற்றிய பல பிரச்னைகளைத் தீர்[illegible] பதற்கு முன்னால் மகாநாடு கூடலாகாதென்[illegible] தேசபந்து தாஸ் அபிப்பிராயப்படுவதனால் [illegible] னிட்டு மேற்படி மகாநாடு தேதி குறிப்பி[illegible] மல் ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

லாரன்ஸ் உருவச்சிலை

லாரன்ஸ் உருவச்சிலையைத் தற்பொழுதுள்ள இடத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று பஞ்சாப் சட்டசபையில் சமீபத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டதென்றும், மேற்படி சிலையில் செதுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளை நீக்கிவிட்டு "யுத்தவீரனும் இராஜதந்திரியுமானவர்" என்று எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மேற்படி தீர்மானத்திற்கு ஒரு திருத்தப்[illegible] ரேரணை கொண்டுவரப்போவதாக மீர் மக்பூ[illegible] முகமது என்பவர் அறிவித்திருப்பதாகவும் "டிரிபியூன்" பத்திரிகை கூறுகிறது.

மகாத்மாஜி தங்குமிடம்

சென்றமீ 28உ காரச்சி வாசிகளின் பிரதிநிதிக் கூட்டத்தார் மகாத்மாஜியைப் பார்க்க வந்து அவருடைய தேக சௌக்கியத்திற்கு காரச்சி வாசம் மிகவும் அனுகூலமாக இருக்குமென்று கூறி அங்கு வந்து வசிக்கும்படி அழைத்தார்களென்றும், ஆனால் மகாத்மா பல இடங்களிலிருந்து நண்பர்கள் தம்மை வந்து பார்ப்பதற்குச் சௌகரியமாயிருக்கும் பொருட்டு மத்திய பிரதேசத்தில் தங்கியிருக்க விரும்புவதால் கடற்கரையிலிருக்கும் ஆந்தேரியில் வசிக்கத் தீர்மானித்து விட்டதாக அவர்களுக்குப் பதிலளித்தாரென்றும் "நியூ டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது.

மனோஜால தந்திரம்

இப்புதிய தமிழ்நூல், பிரம்மனைக் கட்டி ஜாக்கிரதையில் ஏகாக்ர சித்தத்தினால் அநேக அற்புத மனோஜாலமென்னும் கண்கட்டு வித்தைகளைச் செய்ய நவீன மானஸ சாஸ்திர முறைகளைக் காண்பீர்கள். இதில் சூட்சும சரீர முறையும் மேல்நாட்டு மாந்த்ரீக இரகசியங்களும் மர்மங்களும் அடங்கியுள்ளன.

விலை ரூ. 1. தபாற்கூலி பிரத்யேகம்.

குண்டலியோகதந்திரம்

இப்புதிய தமிழ் யோகநூலில் குண்டலியென்ற ஆத்மசக்தியை அபிவிருத்திசெய்ய யோகமுறைகளும் அப்பியாசங்களும் அனுபவ சித்திபெற்ற அரிய பெரிய ஞான இரகசியங்களும் வெகு தெளிவாய் எளிய தமிழ் நடையில் காண்பீர்கள். சித்தர்களின் நூல்களைப் படிப்பதற்கு இது ஒரு திறவுகோலாகும்.

விலை ரூபாய் 1 8 0.

டாக்டர்
K. T. ராமஸ்வாமி, M. A. Ph. D.
இந்தியசாஸ்திர கல்விச்சாலை,
இராயபுரம், மதராஸ்.